winmeen.com

# மூன்றாம் வார நடப்பு நிகழ்வுகள்

## செப்டம்பர் 2020

செப்டம்பர் 15-21

# நடப்பு நிகழ்வுகள்

**1. COVID-19 தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு காங்கோ மற்றும் தெற்கு சூடானுக்கு உதவுவதற்காக, ஐநா பணிக்குழுவுக்கு தனது வல்லுநர் குழுக்களை அனுப்பவுள்ள நாடு எது?**

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ. சீனா

**இ. இந்தியா ☑**

ஈ. பிரேசில்

❖ இந்தியாவின் ஐநா அமைதிகாக்கும் படையினரின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, தெற்கு சூடான் மற்றும் காங்கோ மக்களாட்சிக் குடியரசு (DRC) ஆகியவற்றில் ஐநா அமைதிகாக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இந்தியா இரண்டு நிபுணர்கள் குழுக்களை அனுப்பவுள்ளது. இந்நடவடிக்கை, அவ்விருநாடுகளிலும் COVID-19 சவாலை எதிர்கொள்ளும் நோக்கம் கொண்டது. 15 நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு DRC'இல் உள்ள கோமாவுக்கு அனுப்பப்படும்.

❖ மேலும் 15 நிபுணர்களைக்கொண்ட மற்றொரு குழு தென் சூடானில் உள்ள ஜூபாவுக்கு அனுப்பப்படும். இது, இந்திய அமைதிகாக்கும் படையினரால் நிர்வகிக்கப்படும் மருத்துவ வசதிகளை வலுப்படுத்தவும் COVID-19 தொற்றுநோயை எதிர்த்துப்போராடவும் அந்த இருநாடுகளுக்கும் உதவும்.

**2. உலகம் முழுவதும், 'பன்னாட்டுத் தொண்டு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. செப்டம்பர் 5 ☑**

ஆ. செப்டம்பர் 6

இ. செப்டம்பர் 7

ஈ. செப்டம்பர் 8

❖ ஒவ்வோர் ஆண்டும் செப்.5 அன்று உலகம் முழுவதும் சர்வதேச தொண்டு நாள் அனுசரிக்கப்படுகிறது. தன்னார்வ மற்றும் கொடை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மக்களையும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் ஊக்குவிப்பதே இந்நாளின் நோக்கமாகும். செப்.5–அன்னை தெரசாவின் நினைவு நாளையும் குறிக்கிறது. கொல்கத்தாவில் மேற்கொண்ட தொண்டுகளுக்காக அவர் அறியப்படுகிறார். கடந்த 1979ஆம் ஆண்டில், அமைதிக்கான 'நோபல்' பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

**3. அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு குறித்த இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் மனுதாரராக இருந்தவரும் அண்மையில் காலமானவருமானவர் யார்?**

**அ. கேசவானந்த பாரதி ☑**

ஆ. நரேந்திர குமார் சுவைன்

இ. S மொஹிந்தர்

ஈ. இராமகிருஷ்ணா பாபா பாட்டீல்



- கடந்த 1973ஆம் ஆண்டில், அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்பின் மனுதாரராக இருந்த கேசவானந்த பாரதி, அண்மையில் காலமானார். கேரளாவின் காசர்கோடுவில் உள்ள ஒரு மடத்தின் தலைவராக இருந்த அவர், கடந்த 1969ஆம் ஆண்டு கேரள அரசாங்கத்தின் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை சவால்செய்து உச்சநீதிமன்றத்தை நாடினார். அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பானது உடைக்க முடியாதது என்றும் நாடாளுமன்றத்தால் திருத்தஞ்செய்யமுடியா என்றும் இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.


**4.ஜப்பானைத் தாக்கிவிட்டு தற்போது தென்கொரியாவை நெருங்கிவரும் சூறாவளியின் பெயரென்ன?**

**அ. ஹைஷென் ☑**

ஆ. சின்லாகு

இ. ஹாகுபிட்

ஈ. பவி



- ஜப்பானிய வானிலை ஆய்வுமையத்தின்படி, ஹைஷென் சூறாவளி ஜப்பானைத் தாக்கியதோடு அங்கு கடுமையான காற்றுக்கும் பெருமழைக்கும் காரணமாக மாறியுள்ளது. 'ஹைஷென்' என்றால் சீன மொழியில், 'கடற்கடவுள்' எனப்பொருளாகும். மணிக்கு 180 கிமீ மேற்பட்ட வேகத்தில் வீசிய காற்றுக்கு காரணமான இந்தச்சூறாவளி, கியுஷு தீவில் உள்ள ஒகினாவாவின் சில பகுதிகளை சேதப்படுத்தியது. தற்போது இச்சூறாவளி, தென்கொரியாவின் சிலபகுதிகளை நெருங்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**5.கீழ்க்காணும் எந்த உணவுப்பொருளை மதிய உணவுத்திட்டத்தில் சேர்ப்பதற்கு, இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் பரிந்துரைத்துள்ளார்?**

**அ. பால் ☑**

ஆ. முட்டை

இ. இறைச்சி

ஈ. பழங்கள்



- குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவை மேம்படுத்துவதற்காக காலை உணவிலோ/மதிய உணவிலோ பாலைச்சேர்க்கலாம் என இந்தியக் குடியரசுத்துணைத்தலைவர் M வெங்கையா எண்ணம் தெரிவித் –தார். மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் ஸ்மிரிதி இரானியுடன் பேசும்போது இந்த எண்ணத்தை வெங்கையா தெரிவித்தார்.
- மதிய உணவுத்திட்டத்தில் பாலைச் சேர்க்க அனைத்து மாநிலங்களுக்கும் பரிந்துரைக்க, மத்திய அரசு பரிசீலிக்கும் என்று இந்தியக்குடியரசுத்துணைத்தலைவரிடம் அமைச்சர் உறுதியளித்தார்.

**6.முதலாம் உலக சூரிய ஆற்றல் உற்பத்தி தொழில்நுட்ப உச்சிமாநாட்டை நடத்திய அமைப்பு எது?**

அ. பன்னாட்டு அணுவாற்றல் நிறுவனம்

**ஆ. பன்னாட்டு சூரிய ஆற்றல் உற்பத்தி கூட்டணி ☑**

இ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

ஈ. உணவு மற்றும் வேளாண் அமைப்பு

INTERNATIONAL SOLAR ALLIANCE

❖ முதலாம் உலக சூரிய ஆற்றல் உற்பத்தி தொழில்நுட்ப உச்சிமாநாட்டை (WSTS) 2020 செப்.8 அன்று பன்னாட்டு சூரிய ஆற்றல் உற்பத்தி கூட்டணி (ISA) நடத்தியது. 149 நாடுகளைச் சேர்ந்த 25000'க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் மற்றும் பல புகழ்பெற்ற நீதிபதிகள், இவ்வுச்சிமாநாட்டில் பங்கேற்றனர். இக்கூட்டணியின் தலைவரும், இந்திய புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் அமைச்சருமான RK சிங், முதன்மை அறிவியல் ஆலோசகரான K விஜய இராகவனுடன் இதில் பங்கேற்றார்.

**7.முதலாவது கஞ்சா மருந்துத்திட்டம் அமைக்கப்படவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. இலட்சத்தீவுகள்

**ஆ. ஜம்மு – காஷ்மீர் ☑**

இ. சிக்கிம்

ஈ. அஸ்ஸாம்



❖ பிரதமர் அலுவலகத்திலிருந்து வந்த செய்தியின்படி, ஜம்முவில் அமைந்துள்ள இந்திய ஒருங்கிணைந்த மருத்துவ நிறுவனத்தில் (IIIM), நாட்டின் முதலாவது கஞ்சா மருந்துத்திட்டம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டம், ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசமாக ஆன பிறகு மேற்கொள்ளப்படும் முதல் முதன்மை அயல்நாட்டு முதலீட்டில் அமையும் திட்டமாகும். இது, கனடாவுடன் இணைந்து நிறுவப்படும். கஞ்சாவிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து, வலி நிவாரணி தயாரிக்க பயன்படுகிறது.

**8.ஆண்டுதோறும் நடைபெறும் இந்தோ–பசிபிக் வர்த்தக கருத்துக்களம், எதிர்வரும் அக்டோபர் மாதத்தில், எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?**

அ. பிலிப்பைன்ஸ்

**ஆ. வியட்நாம் ☑**

இ. இந்தியா

ஈ. இலங்கை




❖ மூன்றாவது இந்தோ–பசிபிக் வர்த்தக கருத்துக்களமானது, எதிர்வரும் 2020 அக்டோபர்.28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் வியட்நாமின் தலைநகரமானன ஹனோய் நகரில் நடைபெறவுள்ளது. அமெரிக்க–ASEAN வணிகக் கவுன்சில் மற்றும் பிற வர்த்தக சங்கங்கள், வியட்நாம் அரசாங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தக் கருத்துக்களத்தை ஐக்கிய அமெரிக்க நாடுகள் அரசு நடத்தவுள்ளது. உட்கட்டமைப்பு, டிஜிட்டல் பொருளாதாரம், சந்தை இணைப்பு, நலவாழ்வு மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றில் இந்தக் கருத்துக்களம் முக்கிய கவனம் செலுத்தும்.

**9. 'காதி அகர்பத்தி ஆத்மநிர்பார் மிஷன்' என்ற திட்டத்தை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**

அ. கல்வி அமைச்சகம்

ஆ. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்

**இ. MSME அமைச்சகம் ☑**

ஈ. தொழிலாளர் நல அமைச்சகம்



- 'காதி அகர்பத்தி தற்சார்பு இந்தியா திட்ட'த்தை மத்திய MSME அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. வேலையற்றோர் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்ட இத்திட்டம், கைவினைஞர்களுக்கும் உள்ளூர் அகர்பத்தி தொழிற்துறைக்கும் ஆதரவளிக்கிறது. இந்தத் துறையில் இந்தியாவை தன்னம்பிக்கைகொள்ளச்செய்ய, திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹55 கோடிக்கும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- இதில் 1,500 கைவினைஞர்களுக்கு உடனடி ஆதரவு மற்றும் ₹2.20 கோடி செலவில் இரண்டு சிறப்பு மையங்களை உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.

### 10.மின்னணு மற்றும் வன்பொருள் உற்பத்திக்கான கொள்கையை அறிவித்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. ஒடிசா

இ. அஸ்ஸாம்

ஈ. கேரளா




- தமிழ்நாடு அரசானது புதிய மின்னணு மற்றும் வன்பொருள் உற்பத்தி கொள்கையை அறிவித்துள்ளது. இந்தக்கொள்கை, 2025ஆம் ஆண்டில் மாநிலத்தின் மின்னணு தொழில் உற்பத்தியை 100 பில்லியன் டாலராக உயர்த்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. வரும் 2024ஆம் ஆண்டளவில் 1,00,000'க்கும் மேற்பட்ட மக்களுக்கு திறன் பயிற்சி அளிப்பதற்கும், மின்னணு தொழிற்துறையில் மாநிலத்தின் மனித வள தேவையை பூர்த்திசெய்வதற்கும் இந்தக்கொள்கை முற்படுகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.பன்னாட்டு எழுத்தறிவு நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**




**அ. செப்டம்பர் 8 ☑**

ஆ. செப்டம்பர் 9

இ. செப்டம்பர் 10

ஈ. செப்டம்பர் 11

❖ பன்னாட்டு எழுத்தறிவு நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்.8 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்-படுகிறது. முதலாவது பன்னாட்டு எழுத்தறிவு நாள், கடந்த 1966ஆம் ஆண்டு நடைபெற்ற UNESCO பொதுமாநாட்டின்போது அறிவிக்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் எழுத்தறிவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதை இந்த நாள் நோக்கமாகக்கொண்டுள்ளது. "Literacy teaching and learning in the Covid-19 crisis and beyond" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

**2.எந்த அரசாங்கத் திட்டத்துக்கான புதிய இலச்சினையை, மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், அண்மையில் அறிமுகப்படுத்தினார்?**

**அ. தேசிய மூங்கில் இயக்கம் ☑**

ஆ. தேசிய தேனீ வளர்ப்பு இயக்கம்

இ. தேசிய தோட்டக்கலை இயக்கம்

ஈ. தேசிய கால்நடை பராமரிப்பு இயக்கம்

❖ மத்திய வேளாண் மற்றும் உழவர்நலத்துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர், அண்மையில், குஜராத், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, அஸ்ஸாம், நாகாலாந்து, திரிபுரா, உத்தரகண்ட் மற்றும் கர்நாடகா ஆகிய 9 மாநிலங்களிலும் சேர்த்து மொத்தம் 22 மூங்கில் தொகுதிகளை திறந்து வைத்தார். போட்டியின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மூங்கில் இயக்கத்துக்கான இலச்சினையையும் அவர் வெளியிட்டார். மஞ்சள்-பச்சை வண்ணத்திலான இப்புதிய இலச்சினை, தொழிற்துறை சக்கரம் மற்றும் மூங்கில் கண்டுகளுடன் கூடிய உழவர் பெருமக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

**3.தில்லி-மீரட் RRTS வழித்தடத்திற்கு, $500 மில்லியன் அமெரிக்க டாலர்களை கடனாக வழங்கவுள்ள நிறுவனம் எது?**

அ. ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

ஆ. உலக வங்கி

**இ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ஈ. BRICS வங்கி

❖ தில்லி–மீரட் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பு (RRTS) வழித்தடத்தை உருவாக்குவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியும் இந்திய அரசும் அண்மையில், $500 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

❖ இந்தியாவின் தேசிய தலைநகரப் பிராந்தியத்தில் (NCR) அதி நவீன, அதிவேக 82 கிலோமீட்டர் RRTS வழித்தடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்படவுள்ள மொத்த $1 பில்லியன் டாலர் மதிப்பிலான கடன் தொகுப்பில் இது முதல் தவணையாகும். தில்லியை பிற நகரங்களுடன் இணைப்பதற்காக, NCR பிராந்திய திட்டம், 2021'இன்கீழ், மொத்தம் 3 இரயில் வழித்தடங்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

**4.பாகல்பூர் மற்றும் வாரணாசியில், புதிய திறன்வளர்ப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு மையங்களை அமைக்கவுள்ள நிறுவனம் எது?**

அ. CIPET ☑

ஆ. பூச்சிக்கொல்லி தொழில்நுட்பத்தை உருவாக்கும் நிறுவனம்

இ.CSIR – மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம்

ஈ. CSIR – மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனம்

❖ மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் மத்திய பெட்ரோகெமிக்கல் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (CIPET), இரு திறன்வளர்ப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு மையங்களை பாகல்பூர் (பீகார்) மற்றும் வாரணாசியில் (உத்தரபிரதேசம்) விரைவில் அமைக்கவுள்ளது. பெட்ரோகெமிக்கல் மற்றும் அதை சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காக பட்டயம் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள், ஆண்டுதோறும் தலா 1000 இளையோர்க்கு இம்மையங்களின் மூலம் வழங்கப்படவுள்ளது.

**5.கடந்த 2019ஆம் ஆண்டுக்கான, 'இந்திரா காந்தி அமைதிப்பரிசு' யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**

அ. டேவிட் அட்டன்பரோ ☑

ஆ. டேவிட் மால்பாஸ்

இ. ரத்தன் டாடா

ஈ. முகேஷ் அம்பானி



❖ பிரிட்டிஷ் ஒளிபரப்பாளரான டேவிட் அட்டன்பரோவுக்கு, கடந்த 2019ஆம் ஆண்டுக்கான 'இந்திரா காந்தி அமைதிப்பரிசு' வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், மெய்நிகராக நடைபெற்ற ஒரு நிகழ்வில் அவருக்கு இந்தப் பரிசினை வழங்கினார். "அமைதி, நிராயுதபாணியாக்கம் மற்றும் வளர்ச்சிக்கான இந்திரா காந்தி பரிசு", 1986'இல் நிறுவப்பட்டது. சர்வதேச அமைதியை அடைய உழைக்கும் தனிநபர்கள் / நிறுவனங்களுக்கு இந்தப்பரிசு வழங்கப்படுகிறது. பாராட்டுச் சான்றிதழுடன் கூடிய ₹25 இலட்சம் ரொக்கப்பரிசினை இவ்விருது கொண்டுள்ளது.

**6. COVID-19 தடுப்பூசிகளை அதிக அளவில் கொள்முதல் செய்யும் நிறுவனம் எது?**

அ. உலக நலவாழ்வு அமைப்பு

ஆ. UNICEF ☑

இ. UNESCO

ஈ. AIIMS

- COVID–19 தடுப்பூசிகளை வாங்குவதிலும் வழங்குவதிலும் UNICEF முன்னணியில் உள்ளது. இது, உலகின் மிகப்பெரிய & மிகவிரைவான தடுப்பூசி கொள்முதல் மற்றும் விநியோக செயல்முறையாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது. அமெரிக்க நலவாழ்வு அமைப்புடன் (PAHO) இணைந்து, UNICEF, 92 குறைந்த & நடுத்தர வருவாய்கொண்ட நாடுகளுக்கு, COVID–19 தடுப்பூசிகளை வழங்குவதற்கான முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளது.

**7. COVID–19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள கடன்களை மறுசீரமைப்பது தொடர்பாக, ரிசர்வ் வங்கியால் (RBI) அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**

அ. உதய் கோடக்

ஆ. உஷா தோரத்

**இ. K V காமத் ☑**

ஈ. உர்ஜித் படேல்



- கட்டுமானம், மனை வணிகம், சுரங்கம், வாகனத்துறை உள்ளிட்ட இருபத்தாறு துறைகளில் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தலாம் என்ற K V காமத் குழுவின் பரிந்துரையை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஏற்றுக்கொண்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு உட்பட அந்தக்குழு வழங்கிய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

- COVID சூழலில் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிறுவனங்களுக்காக கடன் மறுசீரமைப்புத் திட்டங்களை அறிவிப்பது தொடர்பாக பரிந்துரைக்க, மூத்த வங்கியாளர் K V காமத் தலைமையிலான குழுவை இந்திய ரிசர்வ் வங்கி கடந்த ஆகஸ்ட் மாதம் அமைத்தது.

**8. NSO'இன் ஓர் அண்மைய அறிக்கையின்படி, எந்த மாநிலமானது எழுத்தறிவு விகிதத்தில் முதலிடம் வகிக்கிறது?**

அ. குஜராத்

ஆ. உத்தர பிரதேசம்

**இ. கேரளா ☑**

ஈ. மத்திய பிரதேசம்




- தேசிய மாதிரி கணக்கெடுப்பின் எழுபத்தைந்தாவது சுற்றின் ஒருபகுதியாக, அண்மையில், தேசிய புள்ளிவிவர அலுவலகம் (NSO) 'Household Social Consumption: Education in India' குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, நாட்டின் கல்வியறிவில் 96.2 சதவீதத்துடன் கேரள மாநிலம் முதலிடம் வகிக்கிறது. தில்லி (88.7%), உத்தரகண்ட் (87.6%), ஹிமாச்சல பிரதேசம் (86.6%), அஸ்ஸாம் (85.9%) ஆகிய மாநிலங்கள் அடுத்த இடங்களை வகிக்கின்றன. அதேசமயம் ஆந்திர பிரதேசம் (66.4%) கடைசி இடம்பிடித்துள்ளது.

- இதில், எட்டாமிடத்தில் தமிழ்நாடு உள்ளது. தமிழ்நாட்டில், கிராமப்புறத்தில் 77.5 சதவீத மக்களும், நகர்ப் புறத்தில் 89% மக்களும் ஒட்டுமொத்தத்தில் 82.9% பேர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர்.

**9.இந்திய இரயில்வேயின் இரயில்வே பாதுகாப்புப்படையால் தடைசெய்யப்பட்ட சட்டத்துக்குப் புறம்பான மென்பொருளின் பெயரென்ன?**

அ. டிக்–டாக்

ஆ. பப்ஜி

**இ. ரியல் மேங்கோ ☑**

ஈ. ரியல் ஆப்பிள்




- இந்திய இரயில்வேயின் இரயில்வே பாதுகாப்புப்படையின் (RPF) நாடு தழுவிய விசாரணையில், "ரியல் மேங்கோ" என்ற சட்டத்துக்குப்புறம்பான மென்பொருளின் செயல்பாடு சீர்குலைக்கப்பட்டது. பயணிகள் இரயில்சேவைகள் மறுதொடக்கம்செய்யப்பட்டபின்னர், தரகு செயல்பாடுகள் அதிகரித்ததன் காரணமாக இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சட்டவிரோத மென்பொருளின் செயல்பாட்டில் ஈடுபட்ட கிங் பின் (அமைப்பு உருவாக்குநர்) மற்றும் முக்கிய மேலாளர்கள் உட்பட ஐம்பது குற்றவாளிகளை RPF இதுவரை கைதுசெய்துள்ளது.

**10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, பத்திரிகா வாயில் அமைந்துள்ள நகரம் எது?**

அ. வாரணாசி

**ஆ. ஜெய்ப்பூர் ☑**

இ. போபால்

ஈ. அகமதாபாத்



- ஜெய்ப்பூரில் அமைந்துள்ள பத்திரிகா வாயிலை, பிரதமர் மோடி, செப்டம்பர்.8 அன்று மெய்நிகராக திறந்து வைத்தார். இந்த அடையாள நுழைவு வாயிலை, ஜெய்ப்பூரின் ஜவஹர்லால் நேரு மார்க் பகுதியில், பத்திரிகா குழுமம் கட்டியுள்ளது.

- பத்திரிகா குழுமத்தின் தலைவர் எழுதிய இரு நூல்களையும் பிரதமர் மோடி அப்போது வெளியிட்டார். இந்நினைவுச்சின்னம், அப்பகுதியில், சுற்றுலாவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. சமூக வலைத்தளங்களில் போலி தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்காக, 'அசோல் சினி' என்றவொரு பரப்புரைத் திட்டத்தை தொடங்கியுள்ள நாடு எது?**

**அ. வங்கதேசம் ☑**

ஆ. மியான்மர்

இ. இலங்கை

ஈ. பாகிஸ்தான்




❖ சமூக வலைத்தளங்களில் போலி தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்காக, வங்கதேசம், அண்மையில், 'அசோல் சினி' என்ற நாடு தழுவிய பரப்புரைத்திட்டத்தை தொடங்கியது. 'மெய்யான அடையாளம்' எனப் பொருள்படும் 'அசோல் சினி' பரப்புரைத்திட்டமானது, போலி தகவல்களையும் வதந்திகளையும் தடுக்க டிஜிட்டல் கல்வியறிவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மூன்று மாத கால பரப்புரைத்திட்டத்தைச் செயல்படுத்த, durbar21.org என்ற டிஜிட்டல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

**2.கால்நடைகளை நிர்வகிப்பதற்காக, பிரதமர் தொடங்கியுள்ள புதிய தளத்தின் பெயர் என்ன?**

**அ. e-Gopala App ☑**

ஆ. e-Livestock App

இ. e-Gaumata App

ஈ. e-Animal Info

❖ 'இ–கோபாலா' செயலி எனப் பெயரிடப்பட்ட, கால்நடைகளை நிர்வகிப்பதற்கான புதிய தளத்தை பிரதமர் தொடங்கவுள்ளார். இந்தச் செயலி, இன மேம்பாட்டுச்சந்தையாக செயல்படும். கால்நடைகளின் வித்துச் சோற்றை (germplasm) வாங்குவது மற்றும் விற்பது உள்ளிட்ட கால்நடைகளை நிர்வகிப்பதுபற்றிய தகவல்களையும் இத்தளம் வழங்குகிறது. கால்நடைகள், விலங்குகளின் ஊட்டச்சத்து மற்றும் பாரம்பரிய மருத்துவ சிகிச்சைக்கான தரமான இனப்பெருக்க சேவைகளையும் இது உறுதிசெய்கிறது. தடுப்பூசி மற்றும் கன்று ஈன்றதை நினைவூட்டுவதற்கான எச்சரிக்கை அறிவிப்புகளையும் இது அனுப்புகிறது.

**3.பசுவதைக்கு தடை விதிக்கவுள்ள இந்தியாவின் அண்டை நாடு எது?**

அ. வங்கதேசம்

ஆ. நேபாளம்

**இ. இலங்கை ☑**

ஈ. சீனா

❖ சமீபத்திய ஊடக அறிக்கையின்படி, இலங்கையின் ஆளுங்கட்சியான இலங்கை பொடுசனா பெரமுனா (SLPP), பசுவதைக்கு தடைவிதிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டில், சுமார் 99% மக்கள் இறைச்சி உண்ணுபவர்களாக உள்ளனர். அதேசமயம், பெரும்பான்மையான ஹிந்துக்களும் பௌத்த

மக்களும் மாட்டிறைச்சி உண்ணுபவர்களாக இல்லை. மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான SLPP கட்சி, கடந்த மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், 2/3 பங்கு பெரும்பான்மையை வென்றது.

**4.அண்மையில் கொடியசைத்து தொடங்கிவைக்கப்பட்ட நாட்டின் இரண்டாவது கிசான் இரயில், நாட்டின் எந்த இரண்டு நகரங்களை இணைக்கின்றது?**

அ. பெங்களூர் – மும்பை

ஆ. சென்னை – தில்லி

**இ. அனந்தபூர் – தில்லி ☑**

ஈ. ஹைதராபாத் – கொல்கத்தா



❖ நாட்டின் இரண்டாவதும் தென்னிந்தியாவின் முதலாவதுமான கிசான் இரயில் சேவை, அண்மையில், கொடியசைத்து தொடக்கி வைக்கப்பட்டது. இது, ஆந்திர பிரதேச மாநிலத்தின் அனந்தபூரை தில்லியில் உள்ள ஆதர்ஷ் நகர் இரயில் நிலையத்துடன் இணைக்கும். இந்த இரயிலை மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கொடியசைத்து தொடக்கிவைத்தார். கிசான் ரயில் திட்டம், 2020–21 வரவுசெலவுத் திட்டத்தில், வேளாண் உற்பத்திப் பொருட்களின் போக்குவரத்துக்காக அறிவிக்கப்பட்டது.

**5.எந்த மத்திய அமைச்சகம் அதன் அனைத்து திட்டங்களுக்குமான 33 செயல்திட்டங்கள் அடங்கிய ஒரு நூலை வெளியிட்டுள்ளது?**

அ. வேளாண் மற்றும் உழவர்நல அமைச்சகம்

**ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ. நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஈ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்

Ministry of Social Justice and Empowerment Government of India

❖ 2020–21ஆம் ஆண்டில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் அனைத்து திட்டங்களுக்கான 33 செயல்திட்டங்கள் அடங்கிய நூலொன்றை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் தாவர்சந்த் கெலோட் வெளியிட்டுள்ளார். மத்திய அமைச்சகம், மாநில அரசுகள் மற்றும் அரசு–சாரா நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்குகளை எட்டுவதற்காக, விரிவான செயல் திட்டம் ஒன்றை சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை வெளியிடுவது இதுவே முதல்முறையாகும்.

**6.தென்னிந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த வான்வழி அவசர ஊர்தி சேவையை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா ☑**

இ. கேரளா

ஈ. ஆந்திர பிரதேசம்



❖ கர்நாடக மாநில முதலமைச்சர் B S எடியுரப்பா, அண்மையில், ஒருங்கிணைந்த வான்வழி அவசர ஊர்தி சேவையை தொடங்கிவைத்தார். தென்னிந்தியாவிலிருந்து தொடங்கப்படும் முதல் சேவையான இதில்

சிக்கலான COVID–19 நோயாளிகளைக் கொண்டுசெல்வதற்கான ஜெர்மனிய தனிமைப்படுத்தும் வசதி உள்ளது. இதனை, ஒரு வானூர்தி தொழினுட்ப நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து, ICATT உருவாக்கி உள்ளது. அதிக சாலைப்போக்குவரத்து இருந்தபோதிலும், இச்சேவை, மருத்துவ அவசரநிலைகளுக்கு சேவையாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**7. 'இணையவழியிலான நுகர்வோர் புகார் தாக்கல் முறை'யை அறிமுகப்படுத்தியுள்ள மாநில / யூனியன் பிரதேச அரசு எது?**

அ. பீகார்

ஆ. உத்தரபிரதேசம்

**இ. புது தில்லி ☑**

ஈ. புதுச்சேரி



❖ புது தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், தில்லி அரசின் 'இணையவழியிலான நுகர்வோர் புகார் தாக்கல் முறை'யை அண்மையில் தொடங்கிவைத்தார். இந்த அமைப்பு, மெய்நிகர் பயன்முறையின் மூலம், புகார்களை பதிவுசெய்ய, மக்களுக்கு உதவுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்த டிஜிட்டல் சேவை, COVID–19 தொற்றுநோய்க்கு இடையே சமூக இடைவெளியை கடைபிடிக்க பொதுமக்களுக்கு உதவுகிறது. கடந்த ஜூலை மாதம், தில்லி அரசாங்கம் ஒரு e–RTI தளத்தை அறிமுகப்படுத்தியது; அது, குடிமக்களுக்கு, இணையவழியில் தகவல் உரிமை (RTI) விண்ணப்பத்தை தாக்கல்செய்ய உதவுகிறது.

**8. e–KYC ஆதார் அங்கீகரிப்பை மேற்கொள்வதற்கு, எந்த அமைப்புக்கு, SEBI ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. BSE

**ஆ. NSE ☑**

இ. NABARD

ஈ. NHB

❖ e–KYC ஆதார் அங்கீகாரத்தை மேற்கொள்ளக்கூடிய நிறுவனங்களின் பட்டியலில், SEBI, தேசிய பங்குச் சந்தையை (NSE) சேர்த்துள்ளது. முன்னதாக, 2020 மே மாதத்தில், e–KYC (மின்னணு முறையில் – உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள்) ஆதார் அங்கீகாரத்தை மேற்கொள்ள அனுமதித்த எட்டு நிறுவனங்களின் பட்டியலை SEBI வெளியிட்டது. சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, UIDAI'இன் ஆதார் அங்கீகரிப்புச்சேவையை, NSE மேற்கொள்ளலாம் என SEBI கூறியுள்ளது.

**9. அண்மையில் எந்த நாட்டோடு, இந்தியா, முதன்முறையாக, கூட்டு ஆணையக் கூட்டத்தை நடத்தியது?**

**அ. அங்கோலா ☑**

ஆ. அர்ஜென்டினா

இ. கியூபா

ஈ. கோஸ்ட்டா ரிக்கா



- இந்தியாவுக்கும் அங்கோலாவுக்கும் இடையிலான முதல் கூட்டு ஆணையக்கூட்டம் அண்மையில் நடந்தது. இக்கூட்டத்திற்கு வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கரும், அங்கோலா வெளியுறவு அமைச்சர் டெட் அன்டோனியோவும் இணைந்து தலைமைதாங்கினர். இந்தக்கூட்டத்தின்போது, இருநாடுகளும் தங்கள் வணிக உறவைப் பன்முகப்படுத்துதற்கு ஒப்புக்கொண்டன. நலவாழ்வு, மருந்துகள், பாதுகாப்பு, வேளாண் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு நல்குவது குறித்து இருவரும் விவாதித்தனர்.

**10.ஐநா உலக உணவுத்திட்டமானது எந்த இந்திய மாநிலத்துடன் கூட்டிணைந்து, நிரப்பு ஊட்டச்சத்து (supplementary nutrition) உற்பத்தி அலகுகளை அமைக்கவுள்ளது?**

அ. பீகார்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. உத்தரகண்ட்

ஈ. ஜார்க்கண்ட்


- ஐநா அவையின் உலக உணவுத்திட்டமும் (WFP) உத்தர பிரதேச மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டமும் இணைந்து இருநூற்றுக்கும் மேற்பட்ட நிரப்பு ஊட்டச்சத்து உற்பத்தி அலகுகளை நிறுவவுள்ளன. இது, ஒருங்கிணைந்த சிறார்கள் மேம்பாட்டு சேவைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தக் கூட்டணி, எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக்குள், 18 மாவட்டங்களைச் சார்ந்த கிட்டத்தட்ட 33 இலட்சம் பயனாளிகளை சென்றடைய நோக்கங்கொண்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.பொருட்கள் & சேவைகளை இருநாட்டு படைகள் பரஸ்பரம் வழங்குவது தொடர்பாக, எந்த நாட்டுடனான ஒப்பந்தத்தில், இந்தியா, கையெழுத்திட்டுள்ளது?**

**அ. ஜப்பான் ☑**



ஆ. பிரான்ஸ்

இ. ஜெர்மனி

ஈ. பிரேசில்

❖ கூட்டுப்பயிற்சியில், பொருட்கள் & சேவைகளை இருநாட்டு படைகள் பரஸ்பரம் வழங்குவது தொடர்பாக இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இருதரப்பு கூட்டுப்பயிற்சி நடவ–டிக்கைகள், ஐநா அமைதிப்பணி நடவடிக்கைகள், பன்னாட்டு நிவாரண நடவடிக்கைகள் போன்றவற்–றில் ஈடுபடும்போது, பொருட்கள் & சேவைகளை இருநாட்டு இராணுவப்படைகள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதில் ஒத்துழைப்புடன் செயல்பட இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

**2.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 'PNGRB' மற்றும் 'CGD அங்கீகாரம்' ஆகியவற்றுடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்

**ஆ. பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் ☑**

இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ. எரிசக்தி அமைச்சகம்

❖ 56 இயற்கை எரிவாயு மையங்களை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் நாட்டுக்கு அர்ப்பணித்தார். நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 56 இயற்கை எரிவாயு மையங்கள் 13 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் பரவியுள்ளன. அவை சண்டிகர், பீகார், ஹரியானா, குஜராத், ஜார்க்கண்ட், கேரளா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், இராஜஸ்தான், உத்தர பிரதேசம், உத்தரகண்ட், மேற்கு வங்கம் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகும்.

❖ பதினோராவது நகர எரிவாயு விநியோக (CGD) அங்கீகார சுற்றுகளை தொடங்க, பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (PNGRB) செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார். இந்த ஒழுங்குமுறை வாரியமானது வண்டிகளுக்கும், வீடுகளுக்கும் சமையல் எரிவாயுவை வழங்கும் சில்லறை வணிக CNG நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கிறது.

**3.எந்த அமைச்சகத்தின்கீழ், தேசிய அறிவியல் & தொழில்நுட்ப தொழில்முனைவோர் மேம்பாட்டு வாரியம் (NSTEDB) செயல்பட்டு வருகிறது?**

அ. கல்வி அமைச்சகம்

ஆ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

**இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஈ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

❖ தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொழில்முனைவோர் மேம்பாட்டு வாரியமானது (NSTEDB) மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. புத்தாக்கம், தொழில்முனைவோர் & அடைவு வினையூக்கத்தில் தேசிய அறிவியல் & தொழில்நுட்ப தொழில்முனைவோர் மேம்பாட்டு வாரியத்தின் (NSTED) பயணம் குறித்த அறிக்கையை சமீபத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை வெளியிட்டது.

**4.கப்பல் அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட புதிய குறைதீர்ப்புத் தளத்தின் பெயர் என்ன?**

**அ. SAROD – துறைமுகங்கள் ☑**

ஆ. SAROJ – துறைமுகங்கள்

இ. SHIMOGA – துறைமுகங்கள்

ஈ. SPEAK – துறைமுகங்கள்



❖ கடல்சார் பிரச்சனைகளை எளிதில் தீர்க்கும் 'SAROD – துறைமுகங்கள் (Society for Affordable Redressal of Disputes)' அமைப்பை மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் மன்சுக் மாண்டவியா காணொளிவழியில் தொடங்கிவைத்தார்.

❖ SAROD–துறைமுகங்கள், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ளன. மேலும், தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவுடனான மோதல்களை, நடுவர்களாக இருந்து தீர்வுகாண்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, சட்ட செலவுகளையும் நேரத்தையும் மிச்சப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, NHAI'ஆல் நிறுவப்பட்ட SAROD–சாலைகள் அமைப்பு போன்று செயல்படுகிறது.

**5.அமெரிக்காவைச் சார்ந்த விண்வெளி நிறுவனமான நார்த்ரோப் கிரம்மன், தனது விண்கலத்திற்கு, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எந்த விண்வெளி வீரர் / வீராங்கனையின் பெயரைச் சூட்டியுள்ளது?**

அ. இராகேஷ் சர்மா

**ஆ. கல்பனா சாவ்லா ☑**

இ. சுனிதா வில்லியம்ஸ்

ஈ. லாரல் கிளார்க்

❖ அமெரிக்காவைச் சார்ந்த விண்வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனமான நார்த்ரோப் கிரம்மன் தனது விண்கலத்திற்கு விண்வெளிக்குச் சென்ற இந்திய வம்சாவளியைச் சார்ந்த முதல் பெண்மணியான கல்பனா சாவ்லாவின் பெயரைச் சூட்டியுள்ளது. இந்நிறுவனம் தனது NG–14 சிக்னஸ் விண்கலத்திற்கு 'SS கல்பனா சாவ்லா' எனப் பெயரிட்டுள்ளது.

❖ இந்த நிறுவனம் அதன் ஒவ்வொரு சிக்னஸ் கலத்துக்கும் மனித விண்வெளிப்பயணத்தில் தனிப்பட்ட சாதனை புரிந்தோரின் பெயரைச்சூட்டுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

**6.ஐந்து விண்மீன் சிற்றூர்கள் (5 Star Villages) என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ள அரசுத்துறை எது?**

அ. வேளாண்மை, கூட்டுறவு & உழவர் நலத்துறை

ஆ. அறிவியல் & தொழில்நுட்பத்துறை

இ. நிதியியல் சேவைகள் துறை

**ஈ. அஞ்சல் துறை ☑**

❖ நாட்டின் உட்புற சிற்றூர்களில், இந்திய அஞ்சல் துறையின் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 5 விண்மீன் சிற்றூர்கள் என்ற புதிய திட்டத்தை இந்திய அஞ்சல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. சுகன்யா சம்ரிதி கணக்குகள், PPF கணக்குகள், பிரதமர் சரக்ஷா பீமா யோஜனா கணக்கு, பிரதமர் ஜீவன் ஜோதி பீமா யோஜனா கணக்கு மற்றும் பிற சேமிப்புக்கணக்குகள் மற்றும் தொடர் வைப்புக்கணக்குகள் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**7. US ஓப்பன் அரையிறுதிப் போட்டிக்கு, தொடர்ந்து 11ஆவது முறையாக தேர்ச்சி பெற்றுள்ள விளையாட்டு வீராங்கனை யார்?**

**அ. செரீனா வில்லியம்ஸ் ☑**



ஆ. கரோலினா பில்ஸ்கோவா

இ. சோபியா கென்

ஈ. ஜோகன்னா கொன்டா

❖ US ஓப்பன் அரையிறுதிப் போட்டிக்கு, செரீனா வில்லியம்ஸ், தொடர்ந்து 11ஆவது முறையாக தேர்ச்சி பெற்றுள்ளார். இதன்மூலம், US ஓப்பனில் தொடர்ச்சியாக 11 முறை அரையிறுதிக்குள் நுழைந்த பெண் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

❖ 38 வயதான செரீனா வில்லியம்ஸ், 6 US ஓப்பன் உட்பட 23 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டங்களை வென்றுள்ளார். US ஓப்பனில், நான்கு முறை இரண்டாமிடம் பெற்றுள்ளார்.

**8.டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டை (Digital Payment Index) உருவாக்க முடிவுசெய்துள்ள அமைப்பு எது?**

**அ. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ☑**

ஆ. NITI ஆயோக்

இ. இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகம்

ஈ. பாரத வங்கி (SBI)

❖ டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டை வகுப்பதன்மூலம் இந்தியாவில் டிஜிட்டல் முறையில் கட்டணம் செலுத்தும் அளவை அளவிட ரிசர்வ் வங்கி (RBI) முடிவுசெய்துள்ளது. இந்தக் குறியீடானது ஏற்கனவே உள்ள முறைகளில் புதுமைகளை மதிப்பிடும் மற்றும் டிஜிட்டல் இடைவெளிகளை குறைக்க உதவும். டிஜிட்டல் கொடுப்பனவு தொடர்பான நந்தன் நிலகேனி குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டின் உருவாக்கம் அமைந்துள்ளது.

**9.போர்ப்ஸின் அமெரிக்க செல்வந்தர்கள் பட்டியலில், முதலிடம் பிடித்த தொழில்முனைவோர் யார்?**



அ. பில் கேட்ஸ்

ஆ. டொனால்ட் டிரம்பு

**இ. ஜெப் பெசோஸ் ☑**

ஈ. வாரன் பபெட்

❖ போர்ப்ஸின் பணக்கார அமெரிக்கர்களின் பட்டியலில், அமேசானின் தலைமை நிர்வாகியும் இணை நிறுவனருமான ஜெப் பெசோஸ் முதலிடத்தில் உள்ளார். போர்ப்ஸின் பட்டியலின்படி தொடர்ச்சியாக மூன்றாம் முறையாக அவர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவரைத்தொடர்ந்த இடத்தில் மைக்ரோசாப்ட் இணை நிறுவனர் பில் கேட்ஸ் உள்ளார். போர்ப்ஸ் மற்றும் புளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீட்டின்படி, $200 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய சொத்துக்களைக் கொண்டுள்ள முதல் நபராக ஜெப் பெசோஸ் மாறியுள்ளார்.

**10.புலம்பெயர் தொழிலாளர்களின் நலன் தொடர்பாக, மாநிலங்களுக்கு வழிகாட்டுதல்களை வெளியிட்ட அமைச்சகம் எது?**

**அ. தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஆ. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. நிதி அமைச்சகம்

❖ COVID–19 காரணமாக இலக்கு மாநிலங்களுக்குத் திரும்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன் தொடர்பான வழிகாட்டுதல்களை மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் வெளியிட்டது. புலம்பெயர்ந்தோருக்கு விலையில்லா COVID–19 பரிசோதனைகளை நடத்துதற்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. மேலும், தற்போதிருக்கும் மாநிலங்களில் இருந்து பிறிதொரு மாநிலத்திற்குச் செல்லும் அனைத்து தொழிலாளர்களின் தகவல்களும் அடங்கிய தரவுத்தளத்தையும் பராமரிக்க அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. 2016–17ஆம் ஆண்டு முதல் 2018–19ஆம் ஆண்டு வரை, இந்தியாவின் பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி, எத்தனை சதவீதம் அதிகரித்துள்ளது?**

அ. 100%



ஆ. 300%

இ. 500%

**ஈ. 700% ☑**

❖ 2016–17ஆம் ஆண்டில் ₹1521 கோடியிலிருந்த இந்தியாவின் பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி, 700% அதிகரித்து, 2018–19ஆம் ஆண்டில் ₹10,745 கோடியாக உயர்ந்துள்ளது என்று பாதுகாப்புப் படைத் தலைவர் ஜெனரல் பிபின் ராவத் தெரிவித்துள்ளார். மேலும், 2019ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகின் சிறந்த பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியாளர்கள் பட்டியலில், இந்தியா 19ஆவது இடத்தில் உள்ளது. இது, இதுவரை அடைந்த இந்தியா மிகவுயர்ந்த தரநிலையாகும்.

**2. POCSO தொடர்பான வழக்குகளை மேற்பார்வையிட, கேரளாவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெண் இ. கா. ப அதிகாரியை நியமிக்க உத்தரவிட்டுள்ள அமைப்பு எது?**

அ. இந்திய உச்சநீதிமன்றம்




ஆ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**இ. கேரள உயர்நீதிமன்றம் ☑**

ஈ. தேசிய பெண்கள் ஆணையம்

❖ பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம் (POCSO) தொடர்பாக கேரள மாநில உயர்நீதிமன்றம், அம்மாநிலத்திற்கு பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. POCSO சட்டத்தின்கீழ் விசாரிக்கப்படும் வழக்குகளை மேற்பார்வையிடுவதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெண் IPS அதிகாரியை நியமிக்க, உயர்நீதிமன்றம், மாநிலத்திற்கு உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கு, உதவி மையத்தை நிறுவவும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

**3. 'iStartup 2.0' என்ற பெயரில் துளிர் நிறுவனங்களுக்கான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய வங்கி எது?**

அ. பாரத வங்கி

ICICI Bank iStartup 2.0

**ஆ. ஐசிஐசிஐ வங்கி ☑**

இ. HDFC வங்கி

ஈ. ஆக்ஸிஸ் வங்கி

❖ இந்தியாவின் முன்னணி தனியார் துறை வங்கியான ஐசிஐசிஐ வங்கி, 'iStartup 2.0' என்ற பெயரில் துளிர் நிறுவனங்களுக்கான பிரத்யேக திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ இத்திட்டத்தின்கீழ், 10 ஆண்டுகாலம் தடையின்றி நடைபெற்று வரும் புதிய வணிகங்களுக்கு, நடப்புக் கணக்கை உருவாக்க முடியும். பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் வலைத்தளத்துடன் ICICI வங்கி தனது API'களை ஒருங்கிணைத்துள்ளது.

**4.ஓமன் கடலில், 'சோல்பாகர்–99' என்ற பெயரில் கடற்படைப் பயிற்சியை நடத்துகிற நாடு எது?**

**அ. ஈரான் ☑**



ஆ. ஓமன்

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. பிரான்ஸ்

❖ ஈரானிய கடற்படையானது ஓமானிய கடலில், 'சோல்பாகர்–99' என்ற பெயரிலான மூநாள் பயிற்சியை உத்திசார் முக்கியத்துவமிக்க ஹார்முஸ் நீரிணையில் தொடங்கியுள்ளது. போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், வானூர்தி மற்றும் ஆளில்லா வானூர்தி ஆகியவற்றில் பொருத்தப்பட்ட, கடலோரத்திலிருந்து கடலுக்குள் ஏவக்கூடிய எறிகணைகள் மற்றும் இரண்டு நிலப்பரப்புக்குள்ளாக ஏவக்கூடிய எறிகணை அமைப்புகள் ஆகியவற்றை ஈரானிய கடற்படை பரிசோதனை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் நிலப்பரப்புகளை பாதுகாக்க, தற்காப்பு உத்திகளை வகுப்பதும் இப்பயிற்சியின் நோக்கமாகும்.

**5.எல்லைப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்காக, எந்த அண்டை நாட்டுடனான 5 அம்ச திட்டத்திற்கு இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது?**

அ. நேபாளம்



**ஆ. சீனா ☑**

இ. பாகிஸ்தான்

ஈ. வங்கதேசம்

❖ ஆதிக்க எல்லைக்கோடு (LAC) தொடர்புடைய 5 அம்ச திட்டத்திற்கு இந்தியாவும் சீனாவும் சமீபத்தில் ஒப்புக்கொண்டுள்ளன. மாஸ்கோவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) கூட்டத்தின் ஒருபகுதியாக, இந்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கரும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யியும் உத்திசார் முக்கியத்துவமிக்க பேச்சுவார்த்தைகளை நடத்தினர். அந்தப் பேச்சுவார்த்தை, படைகளை எல்லைகளிலிருந்து திரும்பப்பெறுவது மற்றும் பதட்டங்களை தணிப்பது ஆகியவற்றை மையமாகக் கொண்டு நடைபெற்றது.

**6.ஆசியாவின் மிகப்பெரிய விமான கண்காட்சியான, 'ஏரோ இந்தியா–21' நிகழ்வை தொகுத்து வழங்கும் இந்திய நகரம் எது?**

அ. குருகிராம்

**ஆ. பெங்களூரு ☑**

இ. விசாகப்பட்டினம்

ஈ. கொல்கத்தா

- ❖ பதின்மூன்றாவது 'ஏரோ இந்தியா–21' வானூர்தி கண்காட்சி, கர்நாடகா மாநிலம் ஏலகங்காவில் உள்ள வான்படை தளத்தில், 2021 பிப்.3 முதல் 7 வரை நடைபெறவுள்ளது. இதற்காக https://aeroindia.gov.in என்ற இணையதளத்தை, பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார்.

- ❖ இந்த இணையதளம், கண்காட்சியில் பங்கேற்கும் விமான நிறுவனங்களுக்கும், பார்வையாளர்களுக்–கும், இந்நிகழ்ச்சி தொடர்பான சேவைகள் மற்றும் தகவல்களை ஆன்லைன்மூலம் மட்டும் வழங்கும். அதோடு பாதுகாப்புத்துறை அமைச்சகத்தின் அண்மைய கொள்கைகள், நடவடிக்கைகள், உள்நாட்டு தயாரிப்பு வானூர்திகள் மற்றும் உலங்கு வானூர்திகள் பற்றிய தகவல்களும் இடம்பெற்றிருக்கும்.

**7. 'பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குவதற்கான கட்டமைப்பை' அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. வீட்டுவசதி & நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம் ☑**

இ. வேளாண்மை & உழவர் நலத்துறை அமைச்சகம்

ஈ. சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலைகள் அமைச்சகம்

Ministry of Housing and Urban Affairs
Government of India

- ❖ பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பொலிவுறு நகர்களை உருவாக்குவதற்கான கட்டமைப்பை, மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமையொழிப்பு இணையமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தொடங்கி வைத்தார். திட்டமிடுதல், முதலீடு திட்டங்களை அமல்படுத்தும்போது, அனைத்து விதமான பருவநிலை மாற்றங்களையும் எதிர்கொள்ளும் வகையிலான தெளிவான கட்டமைப்பை வழங்குவதே CSCAF 2.0 (Climate Smart Cities Assessment Framework)'இன் நோக்கமாகும்.

- ❖ தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனத்தின்கீழ் உள்ள நகரங்களுக்கான காலநிலை மையம், இந்த திட்டத்தை செயல்படுத்தும். நடைபாதசாரிகளுக்கு உதவும் நோக்குடைய, 'Streets for People Challenge' என்ற நிகழ்ச்சியையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.


**8. உலக நலவாழ்வு அமைப்பின், 'Countdown to 2023' என்ற அண்மைய அறிக்கையின்படி, ஆண்டுக்கு ஐந்து இலட்சம் இறப்புகளை ஏற்படுத்தும் என மதிப்பிடப்பட்டுள்ள நோய் எது?**

**அ. இதய நோய் ☑**

ஆ. புற்றுநோய்

இ. நீரழிவு நோய்


ஈ. காசநோய்




- ❖ உலக நலவாழ்வு அமைப்பானது சமீபத்தில், 'கவுண்டவுன் டூ 2023: உலகளாவிய மாறுபக்க கொழுப்பு ஒழிப்பு (trans fat) – 2020 பற்றிய WHO அறிக்கை' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் உணவு விநியோகத்திலிருந்து தீங்கு விளைவிக்கும் பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்கும் நிலையில் உள்ளன.

- ❖ மாறுபக்க கொழுப்பின் நுகர்வால் ஏற்படும் கரோனரி இதய நோயால், ஆண்டுக்கு ஐந்து லட்சம் மக்கள் மரணிப்பார்கள் என இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

**9.புதிய பாரம்பரிய சுற்றுலா கொள்கையை கொண்டுவந்துள்ள மாநிலம் எது?**



அ. ஹிமாச்சல பிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. கேரளம்

❖ குஜராத் மாநில அரசானது அம்மாநிலத்தின் முதல் பாரம்பரிய சுற்றுலா கொள்கையை அறிவித்துள்ளது. பாரம்பரிய அரண்மனை & கோட்டைகள், பாரம்பரிய உணவகங்கள், பாரம்பரிய அருங்காட்சியகங்கள், பாரம்பரிய விருந்தரங்குகள் மற்றும் பாரம்பரிய விடுதிகள் போன்ற வரலாற்று கட்டடங்களை (1950'க்கு முந்தைய வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்கள்) பயன்பாட்டுக்கு கொண்டுவர இக்கொள்கை வழிவகை செய்கிறது. இந்தக் கொள்கையின்கீழ், இந்தப் பாரம்பரிய கட்டமைப்புகளை புதுப்பிப்பதற்காக, குஜராத் மாநில அரசு, ₹5–10 கோடி வரையிலான நிதியை ஒதுக்கீடு செய்யும்.

**10.கீழ்க்காணும் எந்தத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதியுதவியுடன், சீதாமதியில் (பீகார்) ஒரு மீன் வளர்ப்பு வங்கி நிறுவப்படவுள்ளது?**




அ. பிரதமர் கிஸான் யோஜனா

**ஆ. பிரதமர் மத்ஸ்ய சம்பாத யோஜனா ☑**

இ. பிரதமர் கரீப் கல்யாண் யோஜனா

ஈ. பிரதமர் ஜன் ஜீவன் யோஜனா

❖ சீதாமதியில் (பீகார்) ஒரு மீன் வளர்ப்பு வங்கி நிறுவப்படவுள்ளது. மேலும், பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பாத யோஜனாவின் (PMMSY) ஒருபகுதியாக கிஷன்கஞ்சில் (பீகார்) நீர்வாழ் நோய்கள் பரிந்துரை ஆய்வகம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை தரமான மற்றும் மலிவு விலையிலான மீன் குஞ்சுகள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதிசெய்வதோடு மீன் உற்பத்தியையும் மேம்படுத்துகின்றன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ அண்மையில் நிறைவடைந்த அனைத்திந்திய மேலாண்மை சங்கம் (AIMA) – சாணக்யா (தொழில் ஊக்க விளையாட்டு) தேசிய நிர்வாக விளையாட்டு போட்டிகள்–2020'இல், எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய பொதுத்துறை நிறுவனமான தேசிய அனல் மின் நிறுவனத்தின், தமிழ்நாட்டின் வல்லூர் மின்நிலைய அணி வெற்றி பெற்றது. கடந்த ஐந்தாண்டுகளில் முதன்முறையாக NTPC வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய உர நிறுவனத்தின் (National Fertilizers Ltd) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. மும்பை

ஆ. சென்னை

**இ. நொய்டா ☑**

ஈ. கொல்கத்தா

❖ மத்திய இரசாயனம் மற்றும் உர அமைச்சகத்தின் உரங்கள் துறையின்கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவனமான தேசிய உர நிறுவனம், 2020–21'இன் முதல் ஐந்து மாதங்களில், 16.11 இலட்சம் டன் உரத்தை உற்பத்தி செய்து உற்பத்தி இலக்குகளை தாண்டியுள்ளது. 2019–20'இன் இதேகாலகட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 14.26 டன்னுடன் ஒப்பிடும்போது, இது 13 சதவீதம் அதிகமாகும். தேசிய உரங்கள் நிறுவனத்தின் தலைமையகம் நொய்டாவில் அமைந்துள்ளது

**2. துளிர்–நிறுவன சூழலியலுக்கு ஆதரவளிக்கும் மாநிலங்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் ☑**

இ. வேளாண்மை & உழவர் நலத்துறை அமைச்சகம்

ஈ. நிதி அமைச்சகம்

❖ துளிர்–நிறுவன சூழலியலுக்கு ஆதரவளிக்கும் மாநிலங்களின் தரவரிசை பட்டியலின் 2ஆம் பதிப்பை மத்திய வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிடையே போட்டித்தன்மையை ஊக்குவிக்கவும், பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் சூழ்நிலையை மேம்படுத்தவும் இந்தத் தரவரிசை பட்டியலை தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறை தயாரித்துள்ளது.

❖ இந்தத் தரவரிசை கட்டமைப்பில், 30 செயற்பாட்டுப் புள்ளிகளுடன் கூடிய 7 பரந்த சீர்திருத்த பகுதிகள் உள்ளன. இத்தரவரிசையில், 22 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்கள் பங்கேற்றன. இதில், வளர்ந்துவரும் சூழலியல்களில் ஒன்றாக தமிழ்நாடு இடம்பெற்றுள்ளது.

**3.அண்மையில் காலமான சமூக ஆர்வலரும், ஆர்ய சமாஜத்தின் தலைவருமானவரின் பெயரென்ன?**

**அ. சுவாமி அக்னிவேஷ் ☑**



ஆ. நரேந்திர குமார் ஸ்வைன்

இ. கோவிந்த் ஸ்வரூப்

ஈ. கேசவானந்த பாரதி

❖ மூத்த சமூக ஆர்வலரும், ஹரியானா முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சுவாமி அக்னிவேஷ், கல்லீரல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு அண்மையில் தில்லியில் காலமானார். சுவாமி அக்னிவேஷ்,

ஆர்ய சமாஜத்தின் ஒரு புரட்சிகர தலைவராக கருதப்பட்டார். கொத்தடிமைத் தொழிலாளர் முறைக்கும் பெண்சிசுக்கொலைக்கும் எதிராக பல்வேறு போராட்டங்களுக்கு அவர் தலைமை தாங்கியுள்ளார்.

**4. G20 நாடுகளின் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்களின் மெய்நிகர் கூட்டத்தில், இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**

அ. பியூஷ் கோயல்



**ஆ. சந்தோஷ் கங்வார் ☑**

இ. நிர்மலா சீதாராமன்

ஈ. ஜிதேந்திர சிங்

❖ G20 உறுப்பு நாடுகளின் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்களின் மெய்நிகரான கூட்டத்தில், மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் சந்தோஷ் கங்வார் இந்தியாவின் சார்பாக பங்கேற்றார். இந்தச் சந்திப்பு, 'G20 இளையோருக்கான செயல்திட்டம் 2025'ஐ மையமாகக் கொண்டு நடந்தது. மேலும், தொழிலாளர் சந்தையில் COVID-19 சூழலின் தாக்கத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது. முதன்முறையாக இளையோர் தொடர்பான செயல்திட்டத்தை இந்தச் சந்திப்பு அடையாளம் கண்டுள்ளது.

**5. DPIIT'இன் 2019ஆம் ஆண்டுக்கான துளிர்-நிறுவன சூழலியலுக்கு ஆதரவளிக்கும் மாநிலங்களின் தரவரிசை பட்டியலில், சிறந்த மாநிலமாக தெரிவாகியுள்ள இந்திய மாநிலம் எது?**

அ. உத்தர பிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. கேரளம்

ஈ. கர்நாடகா

सत्यमेव जयते
ગુજરાત સરકાર
Government of Gujarat

❖ தொழில் & உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது (DPIIT) சமீபத்தில் 2019ஆம் ஆண்டுக்கான துளிர்-நிறுவன சூழலியலுக்கு ஆதரவளிக்கும் மாநிலங்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டது. இந்தத் தரவரிசைப்படி, மாநிலங்களுள் குஜராத் சிறந்ததாகவும், யூனியன் பிரதேசங்களுள் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் சிறந்ததாகவும் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. கர்நாடகா & கேரளா ஆகிய மாநிலங்கள் வளர்ந்துவரும் சிறந்த மாநிலங்களாக தெரிவாகியுள்ளன. இந்தக் கட்டமைப்பானது 7 பரந்த சீர்திருத்த பகுதிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**6.மாநிலத்தில் உள்ள MSME'களுக்கு ஆதரவு வழங்குவதற்காக, SIDBI வங்கியுடன் கூட்டிணைந்துள்ள இந்திய மாநிலம் எது?**

**அ. இராஜஸ்தான் ☑**

ஆ. கர்நாடகா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கேரளம்

sidbi

- சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியானது (SIDBI) இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள MSME சூழலை மேம்படுத்துவதற்காக அம்மாநில அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அந்த மாநிலத்தில் உள்ள MSME'களுக்கு நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக இராஜஸ்தான் மாநிலத்தின் தொழிற்துறை ஆணையாத்தால் எடுக்கப்பட்ட முன்னெடுப்பாக்கும் இது.

- தொழில்களை ஊக்குவிப்பதற்கும், அனுமதி மற்றும் ஆய்வுகளிலிருந்து வணிகங்களுக்கு 3 ஆண்டுகள் விலக்களிப்பதற்குமாக, MSME சட்டத்தையும் இராஜஸ்தான் மாநில அரசு திருத்தியுள்ளது.

**7.பன்றி இறைச்சி இறக்குமதியைக் குறைப்பதற்காக, 'பன்றிப்பண்ணை இயக்க'த்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம்

**ஆ. மேகாலயா ☑**

இ. உத்தர பிரதேசம்

ஈ. நாகாலாந்து



- மேகாலயா மாநில அரசானது அண்மையில், ₹200 கோடி திட்ட மதிப்பிலான, 'பன்றிப் பண்ணை இயக்க'த்தை தொடங்கியது. ஆண்டுக்கு ₹150 கோடி மதிப்புள்ள பன்றி இறைச்சியின் இறக்குமதியைக் குறைப்பதே இந்த மிகப்பெரிய 'பன்றிப் பண்ணை இயக்க'த்தின் நோக்கமாகும்.

- மேகாலயா மாநில முதலமைச்சர் கான்ராட் K சங்மா இத்திட்டத்தை தொடங்கினார். தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகமானது மேகாலயா மாநிலத்துடன் கூட்டிணைந்து, இந்த 'மேகாலயா மாநில பன்றிப் பண்ணை இயக்க'த்தை செயல்படுத்தியுள்ளது.

**8.குஜராத் மாநிலத்தின் இராகனேஸ்தா சூரிய மின்னுற்பத்தி பூங்காவில், 200 MW திறனுடைய சூரிய மின்னாற்றல் உற்பத்தி திட்டத்திற்கு நிதியுதவி செய்யவுள்ள அமைப்பு எது?**

**அ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ADB ASIAN DEVELOPMENT BANK

ஆ. ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

இ. BRICS வங்கி

ஈ. உலக வங்கி

- குஜராத் மாநிலத்தில் 200 MW சூரிய மின்னுற்பத்தி திட்டத்தை அமைப்பதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியும் (ADB) பிரான்சின் ENGIE குழுமமும், ₹466 கோடி வரையிலான நீண்டகால கடன் ஒப்பந்தத்–தில் கையெழுத்திட்டுள்ளன. இராகனேஸ்தா சூரிய மின்னுற்பத்தி பூங்காவில் உருவாக்கப்படவுள்ள இந்தத் திட்டம், 2021ஆம் ஆண்டின் முதல் பாதியில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ENGIE குழுமத்திற்கு சொந்தமான எலக்ட்ரோ சோலைர் பிரைவேட் லிட் இத்திட்டத்தை செயல்படுத்தும்.

**9.இந்தியாவின் எந்த ஒழுங்காற்று அமைப்பு அதன் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை சீரமைக்கவுள்ளது?**

அ. இந்திய ரிசர்வ் வங்கி

ஆ. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

**இ. இந்திய பங்கு & பரிவர்த்தனை வாரியம் ☑**

ஈ. இந்தியக் காப்பீடு ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை

❖ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) தனது தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வலையமைப்பு மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை சீரமைக்க திட்டமிட்டுள்ளது. மேலும், தனது வலையமைப்பில் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டைக்கொண்டிருக்கவும் SEBI திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக, பாரதி ஏர்டெல், விப்ரோ, TCS, HP, IBM, NTT இந்தியா, ஆரஞ்சு வணிக சேவைகள் இந்தியா தொழினுட்பம் மற்றும் சிபி தொழினுட்பங்கள் உள்ளிட்ட 8 நிறுவனங்களை SEBI தெரிவு செய்துள்ளது.

**10. BREXIT'க்குப் பிறகு, ஐக்கியப் பேரரசு, எந்த நாட்டோடு தனது முதல் பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

அ. இந்தியா

**ஆ. ஜப்பான் ☑**



இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. சீனா

❖ ஜப்பானுடனான பொருளாதார கூட்டொப்பந்தத்தில் ஐக்கியப்பேரரசு (UK) கையெழுத்திட்டுள்ளது. இந்தக் கூட்டாண்மை ஒரு வரலாற்று நடவடிக்கையாகக் கருதப்படுகிறது; ஏனெனில், ஐரோப்பிய ஒன்றியத்தி–லிருந்து ஐக்கியப் பேரரசு (UK) வெளியேறிய பிறகு அது கையெழுத்திட்ட முதல் வர்த்தக ஒப்பந்தமாகும் இது. இந்த ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை சுமார் 15 பில்லியன் யூரோக்கள் மதிப்புக்கு உயர்த்தும் எனக் கூறப்படுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட, 'Connect 2020' மாநாட்டில் பங்கேற்று, தமிழ்நாடு இணையப் பாதுகாப்புக் கொள்கை–2020; தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கொள்கை–2020 மற்றும் தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறிமுறை சார்ந்த செயற்கை நுண்ணறிவு கொள்கை–2020 ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க பழனிசாமி வெளியிட்டார்.

❖ எளிதாக தொழில்புரிய ஏற்ற மாநிலங்கள் தரவரிசைப்பட்டியலில் தமிழ்நாடு பதினான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 2018'இல் பதினைந்தாவது இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறியுள்ளது.

---